LIBRARY
20 JUL 1965
STATE LEGISLATURE

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 8th March 1965

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Election of Presidents of Panchayats

* 4 *S.N. Q.*—SRI M. KALYANASUNDARAM, SRI K. CHEEMAICHAMY AND SRI A. RAGHAVA REDDY } Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the details of the revised programmes for the election of Presidents of Panchayat Boards and Chairmen of Panchayat Union Councils in the State;

(*b*) the reasons for changing the dates; and

(*c*) the details of the steps taken for carrying on the functions of the Panchayats till the elections are over?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தலை 1965 ஏப்ரல் 17-ம் தேதி சனிக்கிழமையும் 1965 ஏப்ரல் 19-ம் தேதி திங்கட்கிழமையும் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் தலைவர்கள் தேர்தலை 1965 ஏப்ரல் 28-ம் தேதியிலிருந்து 30-ம் தேதி வரை நடத்துவதென்று உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) உயர்நீதி மன்றம் இதற்கு முன் பிறப்பித்த தடை உத்தரவுகளைப் பல வழக்குகளில் ரத்து செய்துவிட்டது. நிரப்பப் பட வேண்டிய காலியிடங்கள் இன்னும் சில உள்ளன. பஞ்சாயத்துத் தலைவர்களின் தேர்தல்களை நடத்துவதற்கு முன் இந்தக் காலியிடங்கள் அனைத்தையும் நிரப்புவது உசிதமெனக் கருதப்படுகிறது. நகரப் பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில் தேர்தல் அறிவிப்பு வெளியாகும் தேதிக்கும், வாக்குகள் பதிவாகும் தேதிக்கும் இடையே 21 நாட்களுக்குக் குறைவாக இடைவெளி இருக்க வேண்டுமென்று விதிகளில் சொல்லியிருக்கிறது. இந்த நிபந்தனைகளுக்காகப் போதிய இடைவெளி விட்டு, புதிய தேதிகள் நிச்சயிக்கப்பட்டுள்ளன.

(உ) தேர்தல்கள் பூர்த்தியாகிவிட்ட பஞ்சாயத்துக்களைப் பொறுத்த வரையில், தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் 34 (3) பிரிவின்படி புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் வயதில் முதிர்ந்த உறுப்பினர் தற்காலிகத் தலைவராக நியமிக்கப் பட்டிருக்கிறார்; தேர்தல் நடைபெற முடியாத பஞ்சாயத்துக்களில் மேற்படி சட்டத்தின் 11-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் கண்ட

வரம்பு நிபந்தனையின் கீழ் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அந்தந்த பஞ்சாயத்துக்களின் நிர்வாகத்தை மேற்கொண்டிருக் கிருர்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் அமைச்சர் அவர்கள் கூறினுர் கள் இதை ஒத்திப் போடுவதற்குக் காரணம் உயர்நீதி மன்றத்திலே வழக்குகள் இருந்ததால் என்று. அப்படி இருந்த வழக்குகள் எல்லாவற்றிலுமே பிறப்பிக்கப்பட்ட உத்திரவுகள் ரத்து செய்யப் பட்டனவா? அதன்படி எல்லாக் காலி ஸ்தானங்களிலுமே தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இதுவரையில் ஹைகோர்ட்டிலி ருந்து வந்த ஸ்டே உத்திரவின்படி 21 பஞ்சாயத்துகளுக்கு 108 வார்டுகளுக்கு, 225 மெம்பர்களுக்கு ஸ்டே வெகேட் செய்யப்பட்டி ருக்கிறது. மீதம் இருப்பதைச் சீக்கிரம் வெகேட் செய்யலாம்.

திரு. கரு. சீமைச்சாமி: இந்தப் பஞ்சாயத்துகளிலே தலைவர் தேர்தல் ஒத்திப் போட்ட காரணத்தினுல், தெரு விளக்குகள் எரிவதும், மற்ற சிப்பந்திகள் சம்பளம் பெறுவதும் தடைபடுகிறது. ஆகவே தற்காலிகத் தலைவர் செக் போட்டுப் பணம் வாங்கவும், எலெக்ட்ரிக் சார்ஜ் கட்டவும் என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுப்பது, காஷுவல் லீவ் வழங்குவது, எலக்ட்ரிக் சார்ஜ் கட்டுவது போன்றவைகளை வழங்க அதிகாரம் வழங்கப்பட்டிருக் கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்த எலக்ட்ரிக் லைட்டுகள் நிறுத்திய பிறகு தான் அரசாங்க உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக் கிறது. பஞ்சாயத்துக்களின் மேல் அரசாங்கத்திற்குக் கண்ட்ரோல் இருக்கிறது. அப்படி இருக்கும்போது எலக்ட்ரிசிடி போர்டுக்குப் பணம் செலுத்தவில்லை என்ற காரணத்தினுல் விளக்குகளை நிறுத்தி விட்டார்கள். அப்படி நிறுத்தாமல் இருப்பதற்குச் சர்க்கார் உத்திரவு போடுவார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: பொதுவாக விளக்குகள் சம்பந்தப்பட்ட சார்ஜ்கள் கட்டுவது பஞ்சாயத்துக்களின் பொறுப்பு. 29—2—1965-லே எலக்ட்ரிக் சார்ஜ்களைப் பஞ்சாயத்துக் களின் தற்காலிகத் தலைவர்கள் கட்டலாம் என்று அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கோ. சி. மணி: பெண் அங்கத்தினர்கள் தேர்தலும் இந்தப் பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தல் நடக்காததினுல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: சில பெண் அங்கத்தினர்களின் தேர்தல்களும் நடந்திருக்கும். விதிகளின்கீழ் விவரமான தகவல் படி நடந்துகொள்ளலாம்.

8th March 1965]

புலவர் கா. கோவிந்தன்: ஊராட்சி மன்றங்களிலே தலைவர் தேர்தலுக்காகக் கொடுக்கப்படுகின்ற வாக்குச் சீட்டுகளில் சின்னங்கள் இல்லாமல் பெயர்கள் போட ஏற்பாடாகியிருக்கிறதா? தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருக்கக்கூடும். அப்படியிருக்கும் பொழுது வாக்குச் சீட்டுகளில் பெயர்கள் எழுதிக் கொடுப்பதற்குப் பதிலாக சின்னங்களைப் போட ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அப்பொழுது எப்படி நடந்ததோ அதே முறைதான் இப்பொழுதும் அனுசரிக்கப்படும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இப்பொழுது நடைபெற்றிருக்கின்ற பண்ணிரண்டாயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்களில் தற்காலிகத் தலைவர்களிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. சட்டபூர்வமாக உயர்நீதி மன்றத்தின் உத்திரவு பிரகாரம் எந்த அங்கத்தினரும் தேர்ந்தெடுத்த பிறகு பிரமாணம் எடுத்த பிறகுதான் அபீஷியல் மெம்பராக இருக்க முடியும் என்கிற போது பிரமாணம் எடுக்காமல் இருக்கும் தற்காலிகத் தலைவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் உணர்வார்களா? இது சட்டபூர்வமானதாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: மெம்பர்கள் அல்லாதவர்களுக்கு இப்படிப்பட்ட அதிகாரம் இல்லை. மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சட்டத்தின்படி இம்மாதிரி டெம்பரரி பிரெசிடெண்டாக இருக்கலாம் என்று விதிமுறை வகுக்கப்பட்டிருக்கிறது.

திரு. இரா. நாராயணன்: பஞ்சாயத்து நிர்வாகப் பொறுப்புகளை தற்காலிகத் தலைவர்கள் எடுத்து ஏற்று வருகிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பஞ்சாயத்திற்கு வேண்டிய பணத்திற்கு நாளது வரையில் செக் கொடுக்கப்படவில்லை. இதனால் நிர்வாகம் தடைபடுகிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இதைப்பற்றி பஞ்சாயத்து யூனியன்களுக்கு அரசாங்கம் ஏதாவது அறிக்கை அனுப்ப இருக்கிறார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: 29—2—1965-ல் அரசாங்கத்திலிருந்து ஒரு அறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா: தற்காலிகத் தலைவரிடம் பழைய தலைவர் தோற்றிருந்தால், பழைய தலைவர்கள் சார்ஜ் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். அப்படி மறுப்பதைத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இதைபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு போகவேண்டும். அப்படியில்லாவிட்டால் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல்களைத் தள்ளிப்போட்ட காரணத்தினால் தொல்லைகள் ஏற்படுகின்றன. பஞ்சாயத்துத் தேர்தல்கள் முடிந்த மறுதினமே தலைவர்கள் தேர்தலை நடத்துவதற்கு முன் வருவார்களா ?

MR. SPEAKER : Does it not require notice under the Act?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அடுத்த தேர்தலிலே கவனிக்க வேண்டிய விஷயம்.

திரு. கே. பொன்னையன் : பஞ்சாயத்துத் தேர்தல் நடந்த பிற்பாடு ஜெயித்த மெம்பர்கள் ஊரையே விட்டுக் காணாமல் போய் விடுகிறார்கள். அது அவர்கள் குடும்பங்களுக்குக்கூடத் தெரியவில்லை என்பதை அரசாங்கம் அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே .ம. அ. மஜீத் : அம்மாதிரி தகவல் என்னிடம் ஒன்றும் இல்லை. அண்டர்கிரவுண்டிலோ அல்லது மேலேயோ போய் விட்டார்களா என்பது எனக்குத் தெரியாது.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : கனம் அமைச்சர் அவர்கள் தேர்தலை ஒத்திப்போடுவதற்குக் காரணம் ஹைகோர்ட்டிலுள்ள கேஸ்களின் முடிவைப் பார்த்து பஞ்சாயத்துத் தேர்தல்களைத் தள்ளி வைத்திருப்பதாகச் சொன்னார்கள். அப்படியானால் தேர்தலுக்கு முன்னமையே அதையெல்லாம் யோசித்து ஏன் தள்ளி வைக்கவில்லை என்பதைக் கூறுவார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பொதுவாக மொழிக் கிளர்ச்சியின் காரணமாகத் தோன்றிய அசாதாரணமான நிலைமை ஏற்பட்டதை அடுத்தும் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் உணர்வார்கள். அதற்குள் இந்தக் கேஸ்கள் எல்லாம் முடிந்துவிடலாம் என்ற அபிப்பிராயத்தில்தான் சொல்லப்பட்டது.

திரு. ஆ. துரையரசன் : வயது முதிர்ந்த அங்கத்தினரிடம் பொறுப்பை ஒப்படைக்கும்படி உத்தரவு போடப்பட்டு இருந்தும், அதிகாரிகள் போய் அவர்களை வற்புறுத்திப் பொறுப்பை ஒப்படைக்கும்படி சொல்லியும், பல முன்னாள் தலைவர்கள் பொறுப்பை ஒப்படைக்க மறுக்கிறார்கள். இதற்குக் காரணம் முன்னாள் தலைவராக இருந்தவர்கள் கையாடல் செய்திருப்பதாகப் பல இடங்களிலிருந்து செய்திகள் கிடைத்து இருக்கின்றன. அவர்கள் மீது சரிவர நடவடிக்கை எடுக்கவில்லை என்று அறிகிறோம். இதன் காரணமாகத்தான் பொறுப்பை ஒப்படைக்க மறுக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆகவே சர்க்கார் துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கையாடல் செய்ததன் பலனாக அவர்கள் பொறுப்பை ஒப்படைக்க மறுக்கிறார்கள் என்றால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு வந்தால் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள்.

8th March 1965]

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஆரம்பத்திலே எதிர்பார்த்ததைவிட தலைவர்கள் தேர்ந்தெடுக்க காலதாமதம் ஆகிவிட்டது. இரண்டு மாதத்தில் இன்னும் ஒரு மாத காலம்தான் இருக்கும். இடைக்காலத்தில் இரண்டு விதத்தில் சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஒன்று தாற்காலிகத் தலைவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்ததால் வேலை செய்ய முடியாமல் போகிறது. இரண்டு தாற்காலிகத் தலைவர்கள் வேலை செய்தாலும் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரம் போதுமானதாக இல்லை. ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கும் மின்சாரக் கட்டணம் செலுத்துவதற்கும் மட்டும்தான் முடியும். பஞ்சாயத்து அலுவலகங்கள் வாடகை வீட்டில் உள்ளன. தங்கள் கட்டடங்களை பஞ்சாயத்து யூனியனுக்கு வாடகைக்கு விட்டிருப்பவர்கள் நிலைமை என்ன என்பதை அரசாங்கம் ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : எதிர்பாராத நிலைமை காரணமாக இந்த மாதிரித் தேர்தலைத் தள்ளிப்போட வேண்டிய நிலை ஏற்பட்டது என்பதை கனம் அங்கத்தினர் அறிவார். ஏழு நாட்களுக்கு உட்பட்ட முறையிலேதான் டெம்பரரி பிரெஸிடெண்ட் பதவியில் இருக்கலாம். இதை ஒத்திப்போடுவதால் ஏறக்குறைய இரண்டு மாதங்களுக்கு நீடிக்கும் இந்த நிலை தவிர்க்க முடியாது என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி : பஞ்சாயத்து யூனியன் கூட்டம் மாதம் ஒரு தடவையாவது நடக்க வேண்டியிருக்கிறது. மார்ச் மாதம் முடியும் போது பல வேலைகளைப் பஞ்சாயத்துக்கள் செய்து முடிக்க வேண்டி இருக்கிறது. பஞ்சாயத்து கவுன்சில் கூட்டத்தை யார் நடத்துவது? இது சம்பந்தமாக சர்க்கார் ஒரு அறிக்கை அனுப்புமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தேர்தல் முடிந்த உடனே உடனடியாகக் கூடுவார்கள்.

அரசாங்கத்திற்கு பொதுக்கணக்குக் குழுவின் கருத்துரை

* 173 கேள்வி—புலவர் கா. கோவிந்தன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-ல் தஞ்சை, இராமநாதபுரம் கஜானக்களில் உண்மைக்கு மாறான பட்டியல்கள் (Bogus bills) கொடுத்து ரூ. 66,390 பெறப்பட்டதன் மீது அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை போதுமான தன்று என 1963-64-ம் ஆண்டு பொதுக் கணக்குக் குழு கருத்துத் தெரிவித்துள்ளதா ?

(இ) ஆம் எனில் அரசு அதன் மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) இது குறித்து பொதுக் கணக்குக் குழு தன்னுடைய அதிருப்தியைத் தெரிவித்திருப்பதுடன் தஞ்சாவூர் கருவூல அதிகாரி மீது விரைவில் நடவடிக்கை